தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1994, நவம்பர் 3, வியாழக்கிழமை

ஐப்பசி 18, பவ - திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வுஇலாச்
செல்வரும் சேர்வது நாடு".

தவறாது மழைபெய்து விளையும் விளைநிலங்களும், பொதுநலம் பேணும் சான்றோர்களும் கேடில்லாத செல்வர்களும் ஒருங்கு சேர்ந்து இருப்பதே நல்ல நாடாகும்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 20.5.1994 அன்றும், திரு. பி. என். பரமசிவ கவுண்டர் அவர்கள் 16.6.1994 அன்றும், திரு. சு. பாலன் அவர்கள் 6.7.1994 அன்றும், திரு.எம்.ஏ.பி. ஆறுமுகசாமி அவர்கள் 31.7.1994 அன்றும், திரு.பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் 2.8.1994 அன்றும், திரு. ஏ.எம். இரத்தினசாமி அவர்கள் 15.8.1994 அன்றும், திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் 23.9.1994 அன்றும், திரு. ப. மகாதேவன் பிள்ளை அவர்கள் 24.9.1994 அன்றும், திரு. டி டி டேனியல் அவர்கள் 6.10.1994 அன்றும், திரு. கே.பி. காமாட்சி செட்டியார் அவர்கள் 19.10.1994 அன்றும், திரு. கே. நாராயணசாமி அவர்கள் 26.10.1994 அன்றும் மறைவுற்றதை, இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், ஆந்திர மாநிலத்தின் முன்னாள் முதல்வரும்,

முன்னாள் மத்திய அமைச்சரும் மற்றும் மகாராஷ்டிர மாநிலத்தின் முன்னாள் ஆளுநருமான திரு. கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 1946-ஆம் ஆண்டு முதல் 1951 -ஆம் ஆண்டு வரை நரசரப்பேட்டை பொது, ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார். மேலும், அவர் 1956 ஆம் ஆண்டு முதல் 1964 ஆம் ஆண்டு வரை ஆந்திர மாநில அமைச்சராகவும், 1964 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை ஆந்திர மாநிலத்தின் முதலமைச்சராகவும் பதவி வகித்துள்ளார். 1974 ஆம் ஆண்டு முதல் 1977 ஆம் ஆண்டு வரை மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்துறை, செய்தித் தொடர்பு, வேளாண்மை மற்றும் பாசனம் ஆகிய துறைகளுக்கு மத்திய அமைச்சராகப் பொறுப்பேற்றுப் பணியாற்றியுள்ளார். தவிரவும் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டுவரை மக்களவை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார். மேலும், அவர் மகாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராக 1988 முதல் 1990 வரை பொறுப்பேற்றுச் செயலாற்றியுள்ளார்.

திரு. பி.என். பரமசிவ கவுண்டர் அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூர் தொகுதியிலிருந்தும், 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை பல்லடம் தொகுதியிலிருந்து தொடர்ந்து இரு முறையும், ஆக மொத்தம் மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செம்மையாகப் பணியாற்றி உள்ளார்.

திரு. சு. பாலன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை இரு முறை சென்னை பெரம்பூர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1985 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை சென்னை எழும்பூர் தொகுதியிலிருந்தும் தொடர்ந்து மூன்று முறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்லமுறையில் பணியாற்றியுள்ளார்.

முற்பகல் 10.05

திரு. எம். ஏ. பி. ஆறுமுகசாமி அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை அன்றைய மதுரை மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலிருந்து சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை அன்றைய திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஏ. எம். இரத்தினசாமி அவர்கள் 1955 ஆம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலில் சென்னை நகரம், ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு 1957 ஆம் ஆண்டு வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரை மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதியிலிருந்து தொடர்ந்து இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் 1984, 1989 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களில் புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தொடர்ந்து மூன்று முறை பாராளுமன்ற மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர் மறையும் வரை பாராளுமன்ற உறுப்பினராகச் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ப. மகாதேவன் பிள்ளை அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதல் 1971 ஆம் ஆண்டு வரை கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டிடி டேனியல் அவர்கள் 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. கேபி. காமாட்சி செட்டியார் அவர்கள் 1946 ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தின் பழனி பொது, ஊரகத் தொகுதியிலிருந்து அன்றைய சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. நாராயணசாமி அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரை அன்றைய வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்திய இப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்).